RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/irjt21s233

# ஆழ்வார்களின் பாசுரங்களில் பக்தி

**அ. சலின் சியாமளா** [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, பிஜிபி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாமக்கல்-637207, தமிழ்நாடு, இந்தியா.

# Bhakti in the Hymns of Alwars

**A. Salin Siyamala** [a, *]

[a] Department of Tamil, PGP College of Arts and Science, Namakkal-637207, Tamil Nadu, India

* Corresponding Author: ajaysuyambu@gmail.com

Received: 04-01-2021
Revised: 11-04-2021
Accepted: 16-04-2021
Published: 30-04-2021

Check for updates

**ABSTRACT**

Man is powered by the senses of skin, mouth, eyes, nose and ears. While depicting God in human form, the Alvars sang hymns in a way that emphasized the special nature of God and the use of human organs. Especially in Tirumal's Maniyalakam, Vayalaka is mentioned and he is spoken as a sweet speaker. In every incarnation of Tirumala his vayalaku is narrated. Although Vayalaku is meant to represent the Lordship of the Lord in a positive light, it is also shown to have the two properties of being the mouthpiece that feeds the milk objects which are meant to teach, hear and enjoy the virtues for the benefit of human beings. Eating and speaking are actions of the mouth. On the basis of these deeds the Alvars are distinguished as the mouthpiece of the Lord.

**Keywords:** Tirumal, Alvar, Human organs, Tirumala.

## முன்னுரை

ஒரு மனிதனின் உடலைப் பாதாதி கேசமாகவும், கேசாதி பாதமாகவும் வருணித்துக் காட்டுவதுஇலக்கிய மரபுகளில் ஒன்று. மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளால் மனிதன் இயங்குகிறான். கடவுளரை மனித உருவில் சித்தரித்துப் பார்க்கும் நிலையில், கடவுளர்க்கும் மனித உறுப்புகள், பொறிகள் இருப்பதாகப் பாவித்து, அதன் சிறப்புநலன்களை எடுத்துரைப்பது பக்தி இலக்கிய மரபுகளில் ஒன்றாகத் திகழ்கின்றது. அவ்விதத்தில், திருமாலின் வாயழகு, ஆழ்வார் பாசுரங்களில் இடம்பெறும் திறத்தினை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

## இயற்கையும் திருமாலும்

ஆழ்வார்கள் இந்த உலகத்தையே திருமாலின் உருவாகக் காட்டுவார். பஞ்சபூதங்களாகவும் அவற்றின் விளக்கமாகவும் அவரே விளங்குவதாகவும் அவை அவரது ஏவலுக்குக் கட்டுப்பட்டு நடக்கும் என்றும் கூறுவர். திருமாலின் மேனிவடிவத்தைக் குறிக்கும் பொழுது பாதம், உடல் தோள்கள் ஆகியவற்றை நிலம், அண்டவெளி, விசும்பு, திசை என்பவற்றோடு பொருத்திக் காட்டும் நிலையும் உள்ளது. இலக்கியங்களில் பெண்ணைப் பற்றிய வருணனைப் பகுதிகளே மிகுதி. ஆணைப் பற்றிய வருணனைகளைவிட அவர்களது செயல்பாடுகள் விரிவாகப் பேசப்படும். ஆனால், ஆழ்வார் பாடல்களில் திருமாலின் மெய்யழகு மிகவிரிவாகப் பேசப்படுகின்றது. இது கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

## ஆழ்வார்கள் எடுத்துரைக்கும் வாயழகு

ஆழ்வார்கள் திருமாலின் வாயழகினைப் பல்வேறு நிலைகளில் படம் பிடித்துக் காட்டியுள்ளார். அது சிவந்த நிறம் உடையதாக, மணம் வீசுவதாக, ஒளிமிக்கதாக, இனியமொழி பேசுவதாக, தூய வலம்புரிச் சங்கினை ஊதி முழங்குகின்ற செயல்களைச் செய்வதாக குறித்துள்ளனர். சான்றாக,

"நறும்பவளச் செந்துவர் வாய்"

என்று பெரியாழ்வாரும்"

"கொங்கு அலர் தாமரைவாய்"

"வெண்சங்கம் ஊதும் வாய்" (2)

என்று திருமங்கையாழ்வாரும்,

"குணுங்கு நாறும் வாய்"

"திருபவளச் செவ்வாய்"

என்று ஆண்டாளும், (3)

"அமுதூறும் வாய்"

"மணிவாய்"

"திருவுடை வாய்"

"தேனூறும் வாய்" (4)

"கனிவாய்"

என்று பெரியாழ்வாரும்,

"ஜோதி வாய்"

"சுடர் பவளவாய்"(5)

என்று நம்மாழ்வாரும்,

"வெண்தயிர் தோய்ந்த செவ்வாய்"

என்று குலசேகர ஆழ்வாரும்,

"செவ்வாய்"(6)

என்று தொண்டரடிப்பொடியாழ்வாரும் குறிப்பிட்டுள்ளதனைக் காணலாம்.

இறைவன் இனிமை தருகின்ற மொழியினையும் வேதக் கருத்துகளை வழங்குகின்ற தன்மையினையும் கொண்ட வாயழகு உடையவர் என்பதை, அமுதூறும் வாய், தேனூறும் வாய், ஆராவாரமும், மதுவாயிற் வாயமுதமும் (ஆண்டாள். பா. 575), வாய் தீர்த்தம் (ஆண்டாள் 572) போன்ற பாசுரத் தொடர்களால் அறியலாம்.

அமுதம் என்றாலே சாவா நல்மருந்து, இனிமையானது என்ற வகையில் அமைவனவாகும். இதனால் உயிர்களுக்குப் பிறவி உருவாக்குகின்ற, பிறவிப்பேற்றினை அருளுகின்ற வழியதனை அறிவிக்கின்ற வாயாகவும் இறைவனது வாய் விளங்குகின்றது.

கோலக்கனிவாய் (நம்மாழ்வார் 3556), நின் கனிவாய் (பெரியாழ்வார் 72), செங்கனிவாய் (குலசேகர ஆழ்வார் 704) என்பவை எலலாம் பெருமானின் அழகு பொருந்திய, விரும்பதக்க, காதலை உண்டாக்கவல்ல இனிமையை உள்ளடக்கிய வாயாக உணர்த்தப் பட்டுள்ளதை அறியலாம். எனவே, இளமை, கனிவு, முதிர்ச்சி, மென்மை, வேதப்பொருள் உரைத்தல் என்ற பண்புகளை இறைவன்

விருப்புற்று ஏற்கின்ற நன்னெறிகளை வழங்குகின்ற பொதுப் பண்பினைப் பெற்ற வாயழகு உடையவராய் இறைவன் விளங்குகின்றார்.

வெண்தயிர் தோய்ந்த வாய் (குலசேகரர் 715), குணுங்கு நாறி (வெண்ணெய் நாற்றம் கொண்ட வாய்) (ஆண்டாள்.638) போன்ற குறிப்புகளால் இறைவனது குழந்தைப்பருவ வாயழகு காட்டப்படுகின்றது. பால் உண்டு மகிழும் குழந்தையின் மழலை, இனிமை ஆகியன இறைவனது வாயழகிற்கு அழகு சேர்ப்பனவாக அமைகின்றன.

இவை தவிர வலம்புரி உடைய வாய் மல்லிகை வெண்சங்கு ஊதும் வாய், பாஞ்வ சன்னியத்தை வாய் வைத்த பேரேறே" (பெரியாழ்வார், 275, 409, 248) என்ற வகைகளில் திருமாலின் வாயழகு சிறப்பித்துரைக்கப்படுகின்றது. இதனால் திருமாலின் வாயழகு உண்மை நிறைந்த, தூய்மையான சொற்களை வழங்க வல்லது என்ற கருத்து புலப்படுத்தப்படுகின்றது.

நரசிம்ம அவதாரத்தைப் பற்றிப் பேசும்போது திருமாலின் வாயழகு சுட்டப்படுவது கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். நரசிம்ம அவதாரம் பற்றிப் பேசும் திருமங்கையாழ்வார் திருமாலின் வாயழகு (பேழ்வாயாக) பெரிய அகன்ற வாய், பா, 10,10) என்று காட்சிப் படுத்துகின்றார். கோரைப் பற்களைக் கொண்ட ரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கவல்ல அழகுக்கு மாறான அறுவறுக்கத்தக்க வாய் தோற்றம் இங்கு காட்டப்படுகின்றது. இறைவனது ஆற்றலை போர்குணத்தை எடுத்துரைக்கும் போது இவ்வாறு சுட்டப்படுகின்றது என்று கருதலாம். உருவத்திற்கும் குணத்திற்கும் ஏற்ற வகையில் பொருத்தமான முறையில் ஆழ்வார்களால் இறைவனின் வாயழகு சுட்டப்படடுள்ள திறத்தை இப்பகுதி எடுத்துரைக்கிறது.

வாயழகு என்பது நேர்பொருளில் இறைவனின் திருவருளை காட்டவல்ல பொருளாக விளங்கினாலும் மனித பிறவிகள் பயனடைவதற்கான நன்நெறிகளை போதிக்கின்ற, கேட்பதற்கும் கண்டு ரசிப்பதற்கும் உரிய பால் பொருள்களை உண்ணுகின்ற வளம் கொழிக்கின்ற வாயாகவும் மறுபுறம் கோரப் பண்புடைய தோற்றம் கொண்ட வாயாகவும் உள்ள இரண்டு பண்புகளை ஒருங்கே பெற்றிருப்பதைக் காட்டப்படுகின்றது. வாயின் பயன்கள் இரண்டு உண்பதும், பேசுவதும் ஆகும். இவ்விரண்டில் செயல் அடிப்படையில் ஆழ்வார்கள் இறைவனது வாயழகு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## முடிவுரை

வாய் அழகு மனித உடல் வடிவிலிருந்தே விளக்கமுறுவதால் அது ஒரு வகையில் இறைவனது உருவக் காட்சியைக் காண்பதற்கு இடமளிக்கிறது. அரூபமான உடல் அழகில் அதற்கேற்ற வாயினைக் கற்பனை செய்வதில் சிரமமளிக்காத வகையில் ஆழ்வார்கள் திருமாலின் வாயழகினைப் புனைந்துள்ளனர். எனினும், பிரம்மாண்டமான அருவத்தோற்றத்திற்கு இறைவனின் வாயாக, உள்-வெளி முகங்களாக அறியக்கூடிய இயற்கைவெளியாவற்றையும் கொள்ளலாம். காட்டாக, உடல் கோயில் வாய் கருவறை என்பதால் பச்சை மலையை மேனியாகக் கண்டால் வாயாக அவற்றின் இடுக்குகளை பள்ளத்தாக்குகளைக் கொள்ளலாம். காற்று புகும் அல்லதுவெளியேறும் திசைகளை வாய் வடிவாகக் கொள்ளலாம். வையம் ஏழும் கண்டான் பிள்ளை வாயுனே வாயுள் வையம் கண்ட மடநல்லாள் என்ஆழ்வார்கள் குறிப்பிடுகின்றனர். பிரபஞ்சமே இறைவனது வாய்க்குள் தெரிந்ததாகக் காட்டுவதால் இறைவன் வாய்க்குள் எல்லாம் அடக்கம் என்ற பொருளிலும் இவ்வாறு படைக்கப்பட்டிருக்கலாம். இவ்வாறு ஆழ்வார்கள் தம் பாசுரங்களில் இறைவனை பாடிப்பாடி பரவசத்தில் மூழ்கி திருமால் திருவடிகளில் விழுந்து ஐக்கியமானார்கள்.

## References

Devaneya Pavanar, (2016) Tamil Ilakkiya Varalaru (Tamil) Paperback – 1, Poompukar Pathippagam, Chennai, India

Jagathrakshakan, (1993) Naalayira Divya Prabandham, Alwar Research center, Chennai, India

Varadarajan, Mu., (1972) History of Tamil Literature, Sahitya Akademi (New Delhi), India

**Funding:** NIL
**Acknowledgement:** NIL
**Conflict of Interest:** NIL

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2021. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License